**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 310/2022-ல்**

**அசல் வழக்கு எண். 95/2021**

1. சாந்தா
2. சுப்ரமணியன்
3. துரைமுருகன்
4. ராஜ்குமார்
5. குபேந்திரன்
6. இளஞ்செழியன்
7. வெண்ணிலா
8. சாந்தி .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**// எதிர்//**

1. முருகேசன்
2. அருமைக்கண்ணு .....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு 25.08.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (09.12.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. தினேஷ்** அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. விஜயன், திரு. K.சிவசுந்தர், திரு. M.நிலவழகன் ஆகியோர்கள்** முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(15.12.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, அசல் வழக்கில் கடந்த 22.02.2022 ம் தேதியன்று தோன்றா

தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டதை ரத்து செய்து அசல் வழக்கினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u> :-**

அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக போடப்பட்டிருந்தபோது எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 22.02.2022 ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளதை ரத்து செய்து எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்கள்/1ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பொது எதிருரையின் சுருக்கம்:-(2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி தனதாக ஏற்றுக்கொள்கிறார்)</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்கவேண்டும் என்று இருந்துவிட்டு தற்போது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

5. **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில்......

இந்நீதிமன்றத்தால் கடந்த 22.02.2022 ம் தேதி பிரதிவாதிகள் தரப்பில் வழக்கின்

எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களை தோன்றாத்தரப்பினராக பாவித்து இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இவ்வழக்கைப்பொருத்தவரை வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராகவே, நிரந்தர உறுத்துக்கட்டளைப்பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்கப்பட்ட பரிகாரத்தை பொறுத்து ஒரு முழுமையான தீர்வு பெறவேண்டுமெனில் இருபுறமும் கேட்டு அதன் பிறகே தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும், ஒரு தரப்பினரை மட்டுமே கேட்டு முடிவு செய்யப்படும் எந்த சங்கதியும் நிறைவானதாக இருக்காது என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித கஷ்டநஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது கடந்த 22.02.2022ம் தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ. 500/- த்தை மனுசெலவுத்தொகையாக செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (15.12.2022) அவையறியப்பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)